மாலை முரசு
பக்கங்கள் 22+ 02
முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 21 செவ்வாய்க்கிழமை 07.10.2025 | அதிர்வு 68

## காதல் பிரச்சினையால் மாணவி உயிர்மாய்ப்பு!

### மூதூரில் சோகம்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தின் பெரியபால பகுதியில் 17 வயது மாணவி ஒருவர் உயிரை மாய்த்துக்கொண்டுள் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்



### பொலிஸாரின் சட்ட முரணான செயற்பாடுகளைக் கண்டித்து

# வடக்கின் சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்புப் போர்

(எஸ்.நிதர்ஷன்)

முறைப்படியான தேடுதல் ஆணை இல்லாது பொலிஸார் முன்னெடுத்து வரும் சட்ட முரணான செயற்பாடுகளை கண்டித்து வடக்கின் சட்டத்தரணிகள் இன்று ஒரு நாள் பணிப்புறக்கணிப்பைப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

யாழ். மாவட்டத்தின் அனைத்து நீதிமன்றங்கள் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா உள்ளிட்ட மாவட்டங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் சட்டத்தரணிகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகள் யாழ்ப்பணத்தில் உள்ள நீதிமன்ற வளாகம் முன்னிலையில் இன்று காலை கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர். 02





## வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 5 ஆம் திகதி முறையற்ற வகையில் காணி ஒன்றுக்கு உரிமம் ஏற்பாடு செய்து கொடுத்ததாகக் கூறி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடமையாற்றும் பெண் சட்டத்தரணி ஒருவரின் இல்லத்தில் அவரைக் கைது செய்யும் முகதாவில் வீட்டுக்குள் நுழைந்த யாழ்ப்பாணம் விசேட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார், அந்த வீட்டில் சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரம் எதுவுமின்றி தேடுதல் நடத்தும் தோரணையில் அச்சுறுத்தலாக நடந்து கொண்டனர்.

இந்தச் சட்ட முரணான செயற்பாட்டைக் கண்டித்து இன்று நடைபெற்ற போராட்டத்தின் போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சிரேஷ்ட சட்டத்தரணி வி.திருக்குமரன்,

“இந்தப் போராட்டம் சட்டத்தரணி மீது நடவடிக்கை எடுப்பதை கண்டிப்பதான தல்ல. சட்டம் அனைவருக்கும் பொதுவானது. ஆனால், அந்தச் சட்டத்தை சரியான தேடுதல் ஆணை இல்லாது மேற்கொண்டு வரும் செயற்பாடுகள் ஏற்றுக்கொள்ள முடியாது. அத்துடன் இந்தச் செயற்பாடு பொலிஸாரின் அத்துமீறிய செயற்பாட்டையே காட்டுகின்றது.

எனவே, சட்டத்தரணிகளுக்கு எதிராக அல்லாது பொதுமக்களுக்க எதிராக, பொலிஸார் முன்னெடுக்கும் சட்ட முரணான செயற்பாடுகளைக் கண்டித்தே இன்று வடக்கின் சட்டத்தரணிகள் ஒரு நாள் பணிப்புறக்கணிப்பை இன்று முன்னெடுத்துள்ளனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக கிழக்கின் சட்டத்தரணிகளும் சில மணி நேரம் இன்று பணிப்புறக்கணிப்பைச் செய்து எமது போராட்டத்தை வலுப்படுத்தினர்.

எனவே, சட்டத்தை முன்னெடுக்க முனையும் பொலிஸார் அதைச் சட்ட ரீதியாக முறையான வகையில் மேற்கொண்டு நீதியை வழங்க அல்லது குற்றவாளி எனச் சந்தேகிக்கும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது அவசியம்.” - என்றார்.





## காதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.இந்த மாணவி நேற்று திங்கட்கிழமை பிற்பகல் பெரியபாலம் பகுதியில் உள்ள அவரது வீட்டில் மருந்துகளை அதிக அளவில் அருந்திய நிலையில் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்.

உடனடியாக அவர் மூதூர் தள வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும், அங்கு வழங்கப்பட்ட சிகிச்சைக்குப் பிறகும் அவரின் உடல் நலம் மேம்படாததால், இன்று செவ்வாய்க்கிழமை காலை அவர் உயிரிழந்தார்.

இந்த மரணத்துடன் தொடர்புடைய விசாரணைகளை மேற்கொள்வதற்காக, மூதூர் நீதிமன்றத்தின் கட்டளையின் பேரில், திடீர் மரண விசாரணை அதிகாரி முகமது யூசுப் முஹம்மது லாபிர் இன்று மூதூர் வைத்தியசாலைக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார்.

இதன்போது மேலதிக பரிசோதனைகள் அவசியம் எனக் கருதப்பட்டதனால், சடலம் மூதூர் பொலிஸாரின் மேற்பார்வையில் திருகோணமலை மாவட்ட சட்ட வைத்திய அதிகாரியிடம் இன்று மதியம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக குடும்பத்தாரிடமும் சகோதரர்களிடமும் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணைகளின் போது, இது காதல் தொடர்பான பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டிருக்கலாம் எனத் தெரியவந்துள்ளது. இதன் காரணமாகவே, வளர்ப்புத் தாயார் பயன்படுத்தும் நீரிழிவு நோய் மற்றும் நடுக்கத்துக்காகப் பாவிக்கும் மருந்துகளை மாணவி அதிகமாக அருந்தியிருக்கலாம் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான முழுமையான உண்மைத் தகவல்கள், சட்ட வைத்தியரின் அறிக்கை வந்த பின்னர் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கிழக்கிலும் சட்டத்தரணிகள் போராட்டம்

**(எஸ்.கீதபொன்கலன்)**

"யாழ்ப்பாணத்தில் பெண் சட்டத்தரணியின் இல்லத்துக்குள் நீதிமன்ற உத்தரவு இன்றி பொலிஸார் உட்பிரவேசித்து தேடுதலில் ஈடுபட்டமை சட்டத்தரணிகளின் சிறுப்புரிமையை மீறும் செயல். எனவே இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்." – என்று கூறி இன்று திருகோணமலை நீதிமன்றத் தொகுதிக்கு முன்பாக மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தினர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் சட்டத்தரணி ஒருவர் காணி உறுதிப்பத்திரம் ஒன்று தொடர்பில் எழுந்த குற்றச்சாட்டை அடுத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். இந்தச் சட்டத்தரணியின் இல்லம் நீதிமன்றத் தேடுதல் உத்தரவின்றி பொலிஸாரால் தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது என்று கூறியும், இதனைக் கண்டிப்பதாகத் தெரிவித்தும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.





# இளம் தம்பதி படுகொலை!

## வீட்டில் இருந்து சடலங்கள் மீட்பு

அம்பாந்தோட்டை, ஹங்கம, ரன்ன, வடிகல –பகுதியில் உள்ள ஒரு வீட்டில் இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கூரிய ஆயுதங்களால் இருவரும் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முதற்கட்ட விசாரணையில் பாதிக்கப்பட்டவர்கள் 28 வயதுடைய ஒருவரும் அவரது மனைவியும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி வீட்டின் உரிமையாளர் தற்போது சிறையில் உள்ளார் என்றும், மேலும் அந்தத் தம்பதியினர் தற்காலிகமாக அந்த வீட்டில் வசித்து வந்ததனர் என்றும் கூறப்படுகின்றது.

கொலைக்கான காரணம் இன்னும் அறியப்படாத நிலையில் இன்று பிரேத பரிசோதனை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசின் பாதுகாப்பு தொடரும்

## நாடாளுமன்றில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு வாகனங்களை, அவர்கள் கோரினால் மீண்டும் ஒப்படைக்க முடியும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் நீக்குதல் சட்டம் அண்மையில் நாடளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய முன்னாள் ஜனாதிபதிகள் தாம் அனுபவித்த வரப்பிரசாதங்களை மீள அரசிடம் கையளித்து வருகின்றனர். எனினும், அந்த ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் நீக்குதல் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு விடயங்கள் உள்ளடக்கப்பட வில்லை. இந்தநிலையில், சிலர் தாங்கள் பயன்படுத்திய சில பாதுகாப்பு வாகனங்களைக் கூட மீள ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சட்டத்தின் கீழ் சில வரப்பிரசாதங்கள் மீள கையளிக்கப்பட வேண்டும் என்ற போதிலும், முன்னாள் ஜனாதிபதிகளுக்குப் பாதுகாப்பை வழங்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

எனவே, பாதுகாப்பு வாகனம் உள்ளிட்ட பாதுகாப்பு வரப்பிரசாதங்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிகளால் கோரிக்கை முன்வைக்கப்படுமாயின், அது குறித்து அரசு பரிசீலனை செய்யத் தயாராகவுள்ளது.

ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் நீக்குதல் சட்டத்தின் கீழ் வராத பாதுகாப்பு சார் விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு அரசு தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கும்." – என்றார்.

# எலிக்காய்ச்சலினால் 10 பேர் உயிரிழப்பு




எலிக்காய்ச்சலினால் இந்த வருடம் அனுராதபுரம் மாவட்டத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "2024 ஆம் ஆண்டு எலிக்காய்ச்சலினால் 743 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அவர்களில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

காலநிலை மாற்றத்தின் காரணமாக எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் அவர்களுக்கு நோயாளர் பராமரிப்பு சேவைகளை வழங்குவதில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது.

மேலும் அதிக மருந்துகளை வழங்க வேண்டிய அவசியம், மனித வள பற்றாக்குறை, அதிக பணியாளர்களை நியமிக்க வேண்டிய தேவை, அவசர சிகிச்சை பிரிவுகளை அதிக அளவில் பயன்படுத்த வேண்டிய அவசியம் போன்ற பல பிரச்சினைகளை மருத்துவமனை ஊழியர்கள் சந்திக்க வேண்டியுள்ளது.

லெப்டோஸ்பைரா எனும் தொற்று உடலுக்குள் செல்வதால் இதய நோயாளிகளுக்கு வழங்கப்படுவது போன்ற வசதிகளை வழங்க வேண்டியுள்ளது.

எனவே, இது தொடர்பில் மக்கள் முடியுமானவரை அவதானத்துடன் இருக்க வேண்டும்." – என்றார்.

# மின்னல் தாக்கி மீனவர் ஒருவர் சாவு!

மீன்பிடிப் படகில் மின்னல் தாக்கியதில் மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும், மற்றொருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

மக்கோன, தியலகொட பகுதியைச் சேர்ந்த ஹெட்டியாராச்சி திஷாந்த 41 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இன்று காலை ஒரு நாள் மீன்பிடிப் பயணமாக இருவரும் மீன்பிடிக்கச் சென்றுள்ளார்கள். இதன்போது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# போராட்டக்காலத்தில் மக்களை எழுச்சிகொள்ள வைத்த கலை, இலக்கியங்கள் இப்போது ஊமையாக உள்ளன!

### *வருத்தமளிக்கின்றது என ஐங்கரநேசன் ஆதங்கம்*


தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் கலை, இலக்கியங்கள் அளப்பெரிய பணிகளை ஆற்றியிருக்கின்றன. போர்க்களத்தில் ஆயுதங்கள் பேசியபோது மக்கள் களத்தில் நின்று கலை, இலக்கியங்கள் பேசின. போராட்டங்களின் நியாயங்களையும், வலிகளையும் சொல்லி மக்களை எழுச்சிகொள்ள வைத்து அவர்களைத் தேசமாக ஒருங்கிணைத்ததில் கலை, இலக்கியங்கள் பெரும் பங்களிப்புகளைச் செய்தன. ஆனால், முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனித்ததோடு, எமது கலை, இலக்கியங்களும் மூச்சிழந்து விட்டன. கலை, இலக்கியங்கள் பேசவேண்டிய விடயங்கள் இன்னும் ஏராளம் இருக்க, அவை ஊமையாக இருப்பது வருத்தமளிக்கிறது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும், 'வேர்முகங்கள்' நூலின் ஆசிரியருமான பொ. ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

பொ. ஐங்கரநேசன் கலை, இலக்கிய ஆளுமைகளுடன் நிகழ்த்திய நேர்காணல்களின் தொகுப்பான 'வேர்முகங்கள்' நூலின் அறிமுகவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை முள்ளியவளை பரி-மத்தியா ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் ஏற்புரை ஆற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் –


தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதே தவிர, தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டம் முடிவுக்கு வரவில்லை. போராட்டம் முளைகொண்டதற்கான காரணங்கள் இப்போதும் அப்படியே நீடிக்கும்போது, போராட்டம் முடிவுக்கு வர இயலாது. அது சாத்தியமான வழிகளில் எல்லாம் ஜனநாயகப் போராட்டமாகத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும். துரதிர்ஷ்டவசமாக, இப்போராட்டங்கள் இன்று அரசியல்வாதிகளுக்குரிய ஒரு பணி என்பதாக மாத்திரமே சுருங்கிப் போயுள்ளது. ஆயுதப் போராட்டத்தின் முடிவுடன் தமது பேனாக்களை மூடி வைத்துள்ள கலை, இலக்கியவாதிகள் ஜனநாயகப் போராட்டக் காலத்திலும் தமது பணிகளைத் தொய்வின்றித் தொடரவேண்டும்.

போராட்டக்காலத்தில் பேசாமடந்தைகளாக இருந்த பலர் இப்போது தமிழ்த் தேசிய வாதத்தைக் கேள்விக்குள்ளாக்கத் தலைப்பட்டுள்ளனர். இலங்கையில் இடதுசாரிகள் தலைமையிலான அரசாங்கம் அமைந்துள்ள நிலையில் அவர்கள் உயிர்பெற்றுள்ளனர். போருக்குப் பின்னரான எமது இளைய தலைமுறையைத் தமிழ்த்தேசிய உணர்வில் இருந்தும் மடைமாற்றி, பெருந்தேசிய வாதத்துக்குள் கரைக்கும் நிகழ்ச்சிநிரலை தெரிந்தோ தெரியாமலோ முன்னெடுத்து வருகின்றனர். இந்நிலையில், எமது போராட்டத்தின் நியாயங்களை, போரில் பெற்ற வெற்றிகளை, பட்ட வதைகளை எமது இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்லுவது வரலாற்றுக் கடமையாகும். அதை எமது கலைஞர்களும் இலக்கியவாதிகளும் செய்ய முன்வரவேண்டும். – என்றும் தெரிவித்துள்ளார்.













## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மீண்டும் அபத்த நாடகம்

மீண்டும் ஓர் அபத்த நாடகம் ஜெனிவாவில் அரங்கேறி முடிந்திருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அறுபதாவது அமர்வில் இலங்கை தொடர்பாக 'இலங்கையில் மீள் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் போன்றவற்றை மேம்படுத்தல்' என்ற பெயரில் வழமை போல தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

இந்தத் தீர்மானத்திற்கு அமைய இலங்கை விவகாரம் அடுத்த இரண்டு வருடங்களுக்கு தொடர்ந்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் பார்வையில் இருக்கும் என்று விளக்கமளித்து நம்மை நாமே திருப்திப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்.

நிறைவேற்றப்பட்ட தீர்மான வாசகங்களைப் பார்த்தால் ஆங்காங்கே ஒவ்வொரு இடத்திலும் - ஒவ்வொரு விவகாரத்திலும் - இலங்கை அரசின் ஒத்துழைப்புக்கு இந்தத் தீர்மானம் தொடர்பான பிரேரணையை முன்வைத்த நாடுகள் விழுந்து விழுந்து நன்றி சொல்லி, அந்த ஒத்துழைப்பையும் ஆதரவையும் வரவேற்கின்றன எனக் குறிப்பிட்டிருப்பதை அவதானிக்கலாம்.

ஆனால், கடந்த வருடமும் இதே போன்ற தீர்மானத்தையும், இந்த வருடமும் இந்தப் பிரேரணையையும், தீர்மானத்தையும் இலங்கை அடியோடு நிராகரித்துப் புறமொதுக்கிய நிலையில்தான், தொடர்ந்தும் இலங்கையின் ஆதரவுக்கும் ஒத்துழைப்புக்கும் நன்றி என்று குறிப்பிடும் இந்த அபத்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

தீர்மானத்திற்கு இலங்கை ஒத்துழைப்பும் ஆதரவும் தராத நிலையில் இவ்விடயத்தில் இலங்கையின் ஒத்துழைப்புக்கும் ஆதரவுக்கும் பங்களிப்புக்கும் பல தடவைகள் தீர்மானத்தில் நன்றி கூறப்பட்டிருக்கின்றது. மீண்டும் இரண்டு வருடங்கள் கழித்து இது போல ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படும், அதிலும் முன்னைய தீர்மானத்தை நிராகரித்து, உதாசீனப்படுத்திய இலங்கையின் ஆதரவுக்கும் ஒத்துழைப்புக்கும் நன்றி என்று காதில் பூச்சுற்றும் வாசகங்கள் அடங்கிய அபத்தத் தீர்மானம் நிறைவேறும்.

அங்கத்துவ நாடுகளின் ஏகமனதான தீர்மானத்தைக் கணக்கில் எடுக்காமல் புறமொதுக்கி, நிராகரித்து, உதாசீனம் செய்து நடக்கும் இலங்கைக்குத் தொடர்ந்து அடிப்படையின்றியே நன்றி தெரிவிக்கும் அபத்த நாடகமாக இந்தத் தொடர் நீடிக்கும். பாதிக்கப்பட்ட தமிழர்களாகிய நாங்களும், ஏதோ இலங்கை விவகாரம் இன்னமும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் பார்வைக்கு உட்பட்டுள்ளது என்று எம்மை நாமே தேற்றிக் காலத்தை ஓட்டி தொடர்ந்து ஏமாற வேண்டியதுதான்.

ஆக, இம்முறை ஜெனிவாத் திருவிழா முடிவுக்கு வருகின்றது.

இந்தத் திருவிழா வருகின்றது என்ற உடனேயே சில ஆரவாரங்கள், ஆர்ப்பாட்டங்கள் காட்டிய இலங்கை அமர்வு முடிந்து விட்டதால் இனி அடங்கிவிடும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவது பற்றித் தொடர்ந்து ஜெனிவாவில் வலியுறுத்தப்படுவதால் இம்முறையும் இலங்கைக்கு எதிரான இன்னொரு பிரேரணை வரும் நிலையில் இதோ பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குகிறோம் என்ற அறிவிப்பை இலங்கை இந்த ஜெனிவாக் கூட்டத் தொடருக்கு முதல் மாதத்தில் - ஓகஸ்டில் - வெளியிட்டது. இருக்கும் சட்டம் செப்டம்பரில் நீக்கப்பட்டுவிடும் என்று அப்போது அறிவிக்கப்பட்டது. இப்போது செப்டம்பர் முடிந்து ஒக்டோபர் முதல் வாரமும் தாண்டியாகிவிட்டது. இனி என்ன, ஜெனிவாக் கூட்டத் தொடர் முடிந்து விட்டது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை இல்லாமல் செய்யும் நடவடிக்கையும் வழமை போல மீண்டும் குப்பை கூடைக்குள் போய்விடும். அவ்வப்போது நாடாளுமன்றத்திலும் பல இடங்களிலும் பேசுபொருளாக மாத்திரம் அது நீடிக்கும்.

இப்போது நிறைவேற்றப்பட்ட ஜெனிவாப் பிரேரணை - தீர்மானம் - என்ற அபத்த நாடகத்தில் வழமை போன்ற ஓர் அபத்த அத்தியாயம்தான் பயங்கரவாதத் தடைச் சட்ட நீக்கம் என்ற கயிறும்.




# சுழற்சி முறை பஸ் நேர அட்டவணைக்கு எதிர்ப்பு கிழக்கு மாகாண தனியார் பஸ்கள் பகிஷ்கரிப்பு!

## ஆளுநரின் கருத்தை அடுத்துப் போராட்டம் நிறுத்தம்

**(எஸ்.கீதபொன்கலன்)**

கிழக்கு மாகாண தனியார் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையால் முன்வைக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப் படவிருந்த சுழற்சி முறை பஸ் நேர அட்ட வணைக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று (7) கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத் துக்கு முன்பாக திருகோணமலை முதல் அக்கரைப்பற்று வரையில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்கள், சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் இணைந்து போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த நேர அட்ட வணையைத் தற்காலிகமாக கைவிடுவ தாக மாகாண ஆளுநர் அளித்த உறுதி மொழியை அடுத்து தற்காலிகமாகப் போராட்டத்தைக் கைவிடுகின்றனர் என்று போராட்டத்தை ஒழுங்கமைத்திருந்த தென்கிழக்கு கரையோர பிரதேச தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் எம்.எஸ்.பைரூஸ் கூறினார்.

திருகோணமலை–அக்கரைபற்று, திருகோணமலை–கல்முனை, திருகோ ணமலை–அம்பாறை மார்க்கங்களில் சேவையில் ஈடுபடும் 11 தனியார் பஸ்கள் சகிதம் உரிமையாளர்களும், சாரதிகள் மற்றும் நடத்துனர்களும் மாகாண ஆளுநர் அலுவலகத்தின் முன்பாக போராட்டத்தை ஆரம்பித்தனர்.



தாம் தமது பிரச்சினைகள் குறித்து ஆளுநருடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட உள்ளோம். சாதகமான முறையில் முடிவு கிடைக்காவிட்டால் இங்கு தரித்து வைத் துள்ள 11 பஸ்களையும் எடுத்து செல்ல மாட்டோம். நாங்களும் இந்த இடத்தை விட்டு வெளியேற மாட்டோம் என்று கூறி போராட்டத்தை தனியார் பஸ் சங்கத்தினர் ஆரம்பித்தனர்.

“எமது கோரிக்கைகளை கேட்டறிந்த ஆளுநர் சர்சைக்கு உரிய புதிய தனியார் பஸ் நேர அட்டவணையை தற்காலிகமாக இடைநிறுத்தவும், இதுவரை பயன்படுத்தி வந்த பழைய அட்டவணையை இறுதி முடிவொன்று எட்டப்படும்வரை பயன் படுத்தவும் உடன்பட்டுள்ளார்.

150 கிலோ மீற்றருக்கு அதிக தூரம் பயணம் செய்யும், ஏனைய மாகாணங் களில் உள்ள தனியார் பஸ்களுக்கான நேர அட்டவணைகள் சுழற்சி முறையில் உள்ளதா என்பது பற்றி ஆராய்ந்து பார்ப்பதாகவும், அதன் பின்னர் ஒரு வார இடைவெளிக்குள் மீளவும் எமது சங்கத் துடன் கலந்துரையாடி இறுதி தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள முடியும் என்றும் எமக்குக்கூறினார் என்று ஆளுநருடனான பேச்சு வார்த்தையின் பின்னர் சங்கத்தின் செயலாளர் ஊடகங்களுக்கு தகவல் தெரிவித்தார்.

இவ் திடீர் போராட்டம் காரணமாக திருகோணமலை முதல் கல்முனை, அக்கறைப்பற்று, அம்பாறை வரையிலான வழித்தடங்களில் நேற்று காலை முதல் மாலை வரை வழமையாக சேவையில் ஈடுபட்டிருந்த 15 தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடவில்லை. இதனால் இவ் வழித்தடங்களில் பயணித்தவர்கள் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்ட னர்.





# திருமலையில் கணினி தன்னியமாக்கல் சேவை திறப்பு விழாவும் வாசிப்புமாத ஆரம்ப நிகழ்வும்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

இவ்வருடம் “மறுமலர்ச்சிக்காக வாசிப்போம்” எனும் தொனிப்பொருளில் தேசிய வாசிப்பு மாத செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் உப்புவெளி பொதுநூலகம் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் அனுசரணையுடன் கணினி தன்னியமாக்கல் செய்யப்பட்டு திறப்பு விழாவும், வாசிப்புமாத ஆரம்ப வைபவமும் நடைபெற்றன.

நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய உப தலைவர் கை.வைரவநாதன் கருத்து தெரிவிக்கும்போது, சபையால் பல திட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் சமூக நலன் கருதி அறிவு சார்ந்த சமூகத்தை உருவாக்க வேண்டும் எனும் உயரிய இலக்கை நோக்காகக் கொண்டு அடைய வேண்டுமாயின் அங்கு கல்வி முதன்மையானதாக இருக்க வேண்டும்.

இதற்காக நாம் உப்புவெளி, சாம்பல் தீவு, வெள்ளைமணல், சீனக்குடா ஆகிய பொது நூலகங்களின் வாசகர்களது கல்வி சேவை நலன் கருதி வருடாந்தம் அதிகளவு நிதியைச் சபையில் ஒதுக்கீடு செய்து வழங்குகின்றோம். அதேபோன்று லிங்கநகர், வெள்ளைமணல் முன்பள்ளிகள் மூலமாகவும் இலவச சேவை வழங்கி வருகின்றோம். வாசிப்பு மாதத்தில் இலவச நூலக அங்கத்துவம் வழங்கப்படுவதும் சிறப்பம்சமாகும்.



உப்புவெளி நூலகம் புதிதாக கணினிமயப்படுத்தப்பட்டு மக்கள் பாவனைகாகத் திறந்து வைக்கப்பட்டுள்ள தருணத்தில் இருந்து எமது சபை அதற்கான சகல பராமரிப்பு மற்றும் தேவைகளையும் பூர்த்தி செய்யும் என்றார்.

வரவேற்புரையை செயலாளர் எஸ். வீரசுதாகரன் நிகழ்த்தினார்.

நிகழ்வுக்கான தொகுப்பு மற்றும் நன்றியுரையை பிரதம நூலகர் க.வரதகுமார் நிகழ்த்தினார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். முரளிதரனும் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையர் ந.ஐங்கரனும் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினராக கொழும்பு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைப் பணிப்பாளர் திருமதி சென்னை பண்டார கலந்து கொண்டார்.

நிகழ்வில் கலாபூஷணம் மற்றும் திருகோணமலை தமிழச்சங்க தலைவர் திருமலை நவம் திருகோணமலை கலை இலக்கிய வரலாறு தொடர்பாகச் சிறப்புரையாற்றினார்.

நிகழ்வில் ஆவணவாக்கல் சபையினர், சபை நூலகர், நூலக உத்தியோகத்தர்கள், கௌரவ உறுப்பினர்கள், வாசகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.






# கொழும்பு தமிழ் சங்க வாசிப்பு மாத நிகழ்வு

(அஷ்ரப் ஏ. சமத்)

கொழும்பு தமிழ் சங்கத்தின் வாசிப்பு மாதத்தின் சிறப்பு நிகழ்ச்சியும் செயலாமர்வும் நேற்று (06) பௌனர்மி தினத்தில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் துனைத் தலைவர் சட்டத்தரணி த. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தெ.செந்தில்வேலவர் கலந்து கொண்டார். தொடக்கவுரையை கல்வியமைச்சின் ஆலோசனைக் குழுவின் உறுப்பிணர் காரைக்கனி கந்தையா பத்மானந்தன் நிகழ்த்தினார்

வளவாளர்களாக த. ரமணன் (சிரேஷ்ட உதவி நூலகர், சட்ட பீடம், கொழும்பு பல்கலைக்கழகம், ஜெ.சித்தார்தினி நூலகர் கொழும்பு தமிழ்ச்ஙகம்) எஸ். ரகுநாத் (எழுத்தளார்) மற்றும் கோதை தங்கமயில் சமூக ஆய்வாளர் ச. இந்திரக்குமார் நுலாகக் குழு செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கொழும்பு பிரதேசத்தில் உள்ள தமிழ் முஸ்லிம் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்கள், பிரதி அதிபர்கள், பல்கலைக்கழக மாணவர்களும் இந் செயலமர்விலும் புத்தகக் கண்காட்சியிலும் கலந்து கொண்டனர். அத்துடன் கலந்து கொண்ட சகல மாணவர்களுக்கு இலவசமாக நூல் ஒன்றும் சான்றிதழும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டது.

இங்கு வளவாளர்களாலும் பேச்சாளர்களாலும் வாசிப்பு திறனை விருத்தி செய்தல், அத்துடன் ஒவ்வொரு மாணவனும் தனது வீடுகளில் 25 நூல்கள் கொண்ட சிறிய நூலகங்களை வீடுகளிலே ஆரம்பித்தல், அத்துடன் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் உள்ள நூலகத்தில் அங்கத்தவர்களாக இணைந்து இங்கு வாசித்தல், நூலை இரவலாகப் பெற்றுச் சென்று மீண்டும் ஒப்படைத்தல் போன்ற வாசிப்புத் திறனை விருத்தி செய்வதற்கு மாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் முன்வருதல் வேண்டும். தற்காலத்தில் மொழியறிவு குறைந்து செல்கின்றதைக் காணக் கூடியதாக உள்ளது. மாணவர்கள் நாளந்தம் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எனவும் கரைக்கனி கந்தையா பத்மனாந்தன் தெரிவித்தார்.

அத்துடன் தினகரன் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகள் இல்லாத பாடசாலைகளுக்கு இலவசமாக பத்திரிகைகளை அனுப்பமுடியும் அவ்வாறு பாடசாலையில் பத்திரிகை பெற்றுக் கொள்ள விரும்பும் பாடசாலை பத்திரிகை ஆசிரியர் அல்லது பிராந்திய ஊடகவியலாளர் தொடர்பு கொண்டு அதனை நாளாந்தம் பெற்றுக் கொள்ள முடியும் என தினகனர் ஆசிரியர் தெரிவித்தார்.









# சலூன் கடையும் பத்திரிகையும் சமூகப் பரிமாற்றத்தின் மையம்!



ஒரு சலூன் கடை என்பது முடி திருத்துதல், ஷேவிங் செய்தல் போன்ற தனிப்பட்ட பராமரிப்புச் சேவைகளை வழங்கும் இடமாக மட்டுமே பலராலும் பார்க்கப்படுகிறது. ஆனால் அதன் உண்மையான சமூகப் பங்களிப்பு, இவற்றைவிட மிகப் பெரியது. சலூன் கடைகள் ஒரு சமூகத்தின் நுண்ணியப் பிரதிபலிப்பு. கிராமப்புறங்களில் உள்ள திண்ணைகள் போலவும் நகரங்களில் உள்ள தேநீர்க் கடைகள் போலவும் சலூன் கடைகள் அன்றாடச் செய்திகள் அரசியல் விவாதங்கள் மற்றும் உள்ளூர் நிகழ்வுகள் குறித்துப் பேசப்படும் ஒரு மையமாகச் செயல்படுகின்றன. இந்த உரையாடல்களின் அடித்தளமாக இருப்பது பெரும்பாலும் பத்திரிகைகள். சலூன் கடைக்கும் பத்திரிகைக்கும் இடையிலான இந்த உறவு பல தசாப்தங்களாகத் தொடர்ந்துவரும் ஒரு தனித்துவமான கலாச்சாரப் பிணைப்பாகும்.

### காத்திருப்பு நேரத்தின் துணைவன்

முடி திருத்தக் காத்திருக்கும் நேரம் என்பது ஒருவருக்கு அவசரமாக இருக்கும் போது சற்று சலிப்பை ஏற்படுத்தலாம். இந்த நேரத்தைப் பயனுள்ளதாகவும் சுவாரஸ்யமாகவும் மாற்ற பத்திரிகைகள் உதவுகின்றன. வாடிக்கையாளர் ஒரு செய்தித்தாளையோ அல்லது வார இதழையோ எடுத்துப் படிக்கத் தொடங்கும் போது நேரம் போவது தெரியாமல் போய்விடுகிறது. இது ஒரு வாடிக்கையாளர் திருப்திக்கான சிறந்த வழிமுறையாகவும் சலூன் கடைக்காரர்களுக்கு உதவுகிறது. பத்திரிகைகள் வெறும் பொழுதுபோக்குக்கான கருவியாக மட்டும் இல்லாமல் வாடிக்கையாளர்களிடையே ஒரு பொதுவான தலைப்பை உருவாக்கி உரையாடலைத் தொடங்கவும் உதவுகின்றன.

### சலூன் கடையில் உலாவும் பத்திரிகைகள்

சலூன் கடைகளில் எல்லா வகையான பத்திரிகைகளையும் நாம் காண முடியும். அவை வாடிக்கையாளர்களின் பல்வேறு ஆர்வங்களை எதிரொலிக்கின்றன.

தினசரி செய்தித்தாள்கள் – அரசியல், பொருளாதாரம், விளையாட்டு மற்றும் உலக நிகழ்வுகள் பற்றிய அன்றாடச் செய்திகளை வாடிக்கையாளர்கள் உடனடியாகத் தெரிந்து கொள்ள தினசரி செய்தித்தாள்கள் உதவுகின்றன.

சினிமா மற்றும் வார இதழ்கள் – சினிமா செய்திகள் நடிகர்களின் பேட்டிகள், வதந்திகள், மற்றும் சமூகப் பிரச்சினைகள் பற்றிய கட்டுரைகள் போன்றவை பொழுதுபோக்கு சார்ந்த உரையாடல்களுக்கு வழி வகுக்கின்றன.

விளையாட்டு மற்றும் வணிக இதழ்கள் – குறிப்பிட்ட ஆர்வங்கள் கொண்ட வாடிக்கையாளர்கள் விளையாட்டுச் செய்திகள் அல்லது வணிக இதழ்களைப் படிப்பதன் மூலம் தங்கள் நேரத்தை பயனுள்ளதாக்கிக் கொள்கிறார்கள்.

சலூன் கடைக்காரர்கள் இந்த வேறுபட்ட ஆர்வங்களை அறிந்து அதற்கேற்ப பத்திரிகைகளை வாங்குவதன் மூலம் தங்கள் வாடிக்கையாளர்களைத் தக்கவைத்துக் கொள்கின்றனர்.

தகவல் பரிமாற்றத்தின் மையம் – ஒரு சலூன் கடையில் ஒரு வாடிக்கையாளர் ஒரு செய்தித்தாள் படித்து, அதில் உள்ள ஒரு செய்தியைப் பற்றி சலூன் கடைக்காரரிடம் அல்லது அருகில் இருக்கும் மற்றொரு வாடிக்கையாளரிடம் விவாதிப்பது மிகவும் இயல்பான நிகழ்வு. இது தனிப்பட்ட வாசிப்பை ஒரு குழு விவாதமாக மாற்றுகிறது. உதாரணமாக ஒரு கிரிக்கெட் போட்டி பற்றிய செய்தி, சினிமா பற்றிய விமர்சனம் அல்லது ஒரு அரசியல் தலைவரின் பேச்சு ஆகியவை சலூன் கடைகளில் சூடான விவாதங்களைத் தொடங்கும். இப்படி சலூன் கடைகள் தகவல்களைப் பரப்பும் ஒரு நேரடி ஊடகமாகவும், பொதுக் கருத்தை உருவாக்கும் இடமாகவும் மாறுகின்றன.

நவீன காலத்தில் பத்திரிகையின் பங்கு – ஸ்மார்ட்போன்கள் மற்றும் டிஜிட்டல் ஊடகங்களின் வருகைக்குப் பிறகு சலூன் கடைகளில் அச்சிடப்பட்ட பத்திரிகைகளின் தேவை குறைந்துவிட்டதாக ஒரு பார்வை உள்ளது. பலர் தங்கள் செல்போன்களில் செய்திகளைப் படிக்கத் தொடங்கிவிட்டனர். இருப்பினும் பல சலூன் கடைகளில் இன்றும் பத்திரிகைகள் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன.

சலூன் கடையும் பத்திரிகையும் ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டவை. பத்திரிகைகள் சலூன் கடைகளுக்கு ஒரு அறிவார்ந்த மற்றும் கலாச்சார மதிப்பைக் கூட்டுகின்றன. அதேசமயம், சலூன் கடைகள் பத்திரிகைகளுக்கு ஒரு முக்கியமான சமூகத் தளத்தை வழங்குகின்றன. இந்த இரண்டுக்கும் இடையிலான உறவு நம் சமூகத்தின் தகவல்தொடர்பு மற்றும் கலாச்சாரத்தின் ஒரு சிறந்த அடையாளமாக விளங்குகிறது. இது ஒரு முடி திருத்தும் இடத்தின் எல்லைகளைத் தாண்டி, சலூன் கடையை ஒரு சமூக விவாதத்தின் மையமாக மாற்றுகிறது.

**வி.பிரசாத்,**
மூன்றாம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998




# அகில இலங்கை தமிழ்தின போட்டியில் முதலாமிடம்!



அகில இலங்கை தமிழ் தின போட்டி கடந்த 5 ஆம் திகதி கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த நிலையில் பிரிவு 3 கட்டுரை எழுதுதலில் போட்டியில் யாழ். கரணவாய் மகாவித்தியாலய மாணவி யோகநேசன் ரம்மியா தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.



# கல்முனை ரோயல் வித்தியில் யானை பெரும் அட்டகாசம்!

(எம்.என்.எம்.அப்ராஸ்)

அம்பாறை மாவட்டத்தில் அண்மைக் காலமாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது. இதனால் பொது மக்கள் மிகவும் அசௌகரியங்களுக்கு ஆளாவதுடன் யானைகளால் பொது மக்களின் உடமைகளுக்கும் ஏற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கல்முனை பிரதேசத்தில் அமைக்கப்பட்ட கீரின் பீல்ட் தொடர் மாடி மக்கள் குடியிருப்பு பகுதியில் உள்ள கல்முனை ரோயல் வித்தியாலத்தில் இன்று (07)அதிகாலை காட்டு யானைகள் உள் நுழைந்து பாடசாலை வளாகத்தில் நடாப்பட்டிருந்த மரங்கள் மற்றும் பூச்சாடிகள் சிலவற்றையும் குடிநீர் தண்ணீர் இணைப்பு, நீர் தாங்கிக் குழாய் என்பவற்றையும் காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளன.

இரவு வேளைகளில் பொது மக்கள் குடியிருப்பு பகுதியில் அடிக்கடி ஊடுருவும் காட்டு யானைகள் அயலிலுள்ள வயல் வெளிகளில் கடந்த சில நாள்களாக உலா வருகின்றன. இந்த நிலையில் யானைகள் குடியிருப்புப் பகுதியில் வந்து சேதம் விளைவிக்கின்றன என்று மக்கள் தெரிவித்தனர்.



குறிப்பாக இரவு நேரங்களில் குடியிருப்பு பகுதிகளில் காட்டு யானைகள் வருகை தருவதால் மிகவும் அச்ச நிலையில் தாம் வசித்து வருகின்றனர் என்று பொது மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் உரிய நடவடக்கை எடுக்குமாறு பாடசாலை சமூகத்தினரும் பிரதேச மக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.



# பழமொழிகளில் பெண்கள் வகிபங்கு!

தலைமுறை கடந்து வந்த மக்களின் அறிவு, பழக்க வழக்கங்கள், பண்பாடு, வாழ்க்கை முறைகள், சமூகக் கட்டமைப்பு போன்றவற்றின் சாரத்தை கூறுவனாக பழமொழிகள் காணப்படுகின்றன. இந்த நிலையில் இவற்றின் பயன்பாடு என்பது தற்போதைய கால சூழ்நிலையில் வழக்கிழந்து போய் உள்ளன என்றே கூற வேண்டும். இவற்றைத் தேடியறிந்து சேகரித் துக் கொள்ளும் நோக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தின் நாவாந்துறை, குருநகர் ஆகிய பகுதிகளை கள ஆய்வுக்காக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களாகிய நாம் தெரிவு செய்திருந்தோம். இந்த ஆய்வின் மூலம் பால்நிலை சார்ந்த பழமொழிகள் மற்றும் சாதாரணமாக பேசப்படும் பழமொழிகள் போன்றவற்றையும் சேகரித்துக் கொள்ள முடிந்தது.

அவற்றைத் தலைமுறை தலைமுறையாக கடத்துவதில் பெண்களின் பங்களிப்பு மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இவை பேச்சு மொழியின் மூலம் தலைமுறை தாண்டியும் கூறப்படுகின்றன. ஒரு குடும்பத்தின் மூத்த தலைமுறை பெண்களான பாட்டி மார்கள் அவர்களிடமிருந்து அம்மாக்கள் அவற்றின் வழியே பிள்ளைகள் என தலைமுறை தாண்டி கடத்தப்படுகின்றது. அந்த வகையில் முன்பின் அறிந்திராத மக்களிடமிருந்து பல்வேறுபட்ட பழமொழிகளை கேட்டறிந்து கொள்ள இந்தக் கள ஆய்வு ஒரு வாய்ப்பாக அமைந்தது. இவர்கள் தமது நாளாந்த வாழ்க்கையில் செய்யும் ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் ஏதாவது ஒரு பழமொழியையோ அவை சார்ந்த கதைகளையோ கூறுகின்ற தன்மையையும் கண்டுகொள்ள முடிந்தது. ஆனால் தற்போதைய தலைமுறையிடம் இப்ப பழமொழிகள் பற்றிய அறிவு இல்லை என்றே கூற வேண்டும்.

அந்த வகையில் கள ஆய்வுக்காகச் சென்றிருந்த போது பழமொழிகளை எவ்வாறு சேகரிப்பது என்ற அச்சத்தில் நின்று கொண்டிருந்த வேளை எம்மை அவதானித்த ஒரு பாட்டி "அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாசமெல்லாம் பேய்" என்று கூறினார்.

இவ்வாறு ஆரம்பமானது எமது கள ஆய்வு. அந்த வகையில் மரியரட்னம் என்ற பாட்டியிடம் இருந்து இவ்வாறான பழமொழிகள் சிலவற்றை சேகரிக்க முடிந்தது.

" தாயப் போல பிள்ள நூல போல சேல" தாயின் அடையாளத்தை வைத்து பிள்ளையை இனம் கண்டு கொள்ள முடியும் என்பதை இவ்வாறு கூறுவர்.

" வேர் வழி ஓடி விளாத்தி முளைச்சாலும் தாய் வழி தப்பாது " மனிதர்கள் அவர்களின் தாயின் வழி உறவுகளிலேயே பெரும்பாலும் அன்னியோனியமாக இருப்பர் என்பதை இப்ப பழமொழி கூறுகின்றது.

வீட்டில் சிறு பிள்ளைகள் தவறு செய்தால் " அடிச்சு வழவாத பிள்ளையுமில்ல முறிச்சு வழவாத முருங்கயுமில்ல" என்று கூறுகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. மேலும் இப்ப பழமொழிகளில் அறிவு புகட்டு கின்ற தன்மையும் சில சந்தர்ப்பங்களில் பெண் அடிமைத் தனத்தின் போக்குகளையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

குறிப்பாகக் கள ஆய்வுக்குச் சென்றிருந்த ஒரு வீட்டில் அங்கிருந்த பாட்டி ஒருவரால் இவ்வாறான பழமொழி கூறப்பட்டது. " சான் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை" இங்கே ஒரு சிறுவனாக இருந்தாலும் அவனை ஆண் என்று உயர்த்தி கூறுகின்ற போக்கும் காணப்பட்டது. மேலும் கள ஆய்வில் சேகரிக்கப்பட்ட பழமொழிகளில் பால்நிலை சார்ந்து கூறப்பட்ட சில பழமொழிகள் பின்வருமாறு,

" கோடி ஒரு வெளுவ குமரி ஒரு பிள்ள", " ஆண் நிழலில் நிண்டு போ பெண் நிழலில் இருந்து போ" , " அழுதாலும் பிள்ள அவளே பெறவேண்டும்", " கல்யாணம் முடிச்சா கால்க்கட்டு பிள்ள பெத்தா வாய்க்கட்டு", " தாய தண்ணி கரையில பார்த்தா பிள்ளய வீட்டில பாக்க வேணுமோ", " உள்ள ஓங்காளம் வெளிய சிங்காரம்", " மாமியார் வீடு மகா சௌக்கியம் நாலு நாள் செண்டா நாய் படாப் பாடு" போன்றவாறான சில பழமொழிகளை திரட்ட முடிந்தது.

இவ்வாறாக தலைமுறை தலைமுறையாக பேணப்பட்டு வந்த பழமொழிகள் தற்போதைய கால சூழ்நிலையில் பயன்படுத்தப்படுவதில்லை என்பது வருத்தத்துக்கு உரிய ஒன்றே.

நகர மயமாக்கப்பட்ட தற்போதைய சூழ்நிலையில் கூட்டுக் குடும்பத்தை விடுத்து தனி குடும்பங்கள் அதிகமாக தோற்றம் பெற்றதால் அறிவு புகட்டக் கூடிய முதியோர்கள் தனித்து விடப்படுகின்ற நிலைமையும் பண்பாடு, பாரம்பரியங்களை கடத்துவதில் தடையாக காணப்படுகின்றது. வழக்கிழந்து போய் உள்ள பழமொழிகளை வெளிக்கொண்டு வருவதற்கு கள ஆய்வுகள் வாய்ப்பாக அமைந்தன.

**சி. சிவலஷ்சுமி**
இரண்டாம் வருடம்,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# ஒரே வருடத்தில் இரண்டு தேசிய வெற்றி பெற்ற புளிச்சாக்குளம் உமர் பாறுக் மகா வித்தியாலயம்








**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

2025 ஆம் ஆண்டில், புளிச்சாக்குளம் உமர் பாறுக் மகா வித்தியாலய மாணவர்கள் இரண்டு தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்று, பாடசாலையின் நற்பெயரை நாடளாவிய ரீதியில் பிரகாசமாக்கியுள்ளனர்.

அகில இலங்கை தமிழ்மொழி தினப் போட்டியில் பாடசாலை மாணவிகள் இருவர் ஒரே வருடத்தில் இரண்டு தேசிய வெற்றிகளைப் பெற்றுள்ளனர்:

திறனாய்வுப் போட்டியில் ஜீ. தரண்யா முதலாம் இடத்தையும், இலக்கிய விமர்சனம் போட்டியில் வீ. நதீஹாஷினி மூன்றாம் இடத்தையும் பெற்று சாதித்துள்ளனர்.

இவ்விரு மாணவிகளின் வெற்றிக்குப் பின்னால் தினந்தோறும் வழிகாட்டியாக இருந்த திருமதி ஏ. சுலைஹா ஆசிரியையின் பங்கு பாராட்டப்படத்தக்கது என்று பாடசாலையின் அதிபர் எம்.யூ.எம். சாஜஹான் குறிப்பிட்டார்.

இந்த சாதனைகள் பாடசாலையின் கல்வித் தரத்தையும், கலாச்சார வளர்ச்சியையும் பிரதிபலிக்கின்றன.





# நேரத்தின் நெடுவழியில் ஒலிக்கும் இலங்கை வானொலி!

**(இலங்கை வானொலி இலங்கையின் முன்னணி ஒலிபரப்பு நிலையமாகும் மற்றும் ஆசியாவின் முதல் வானொலி நிலையமாகும். இது 1925 இல் தொடங்கப்பட்டது. பிரித்தானிய பி.பி.சி. வானொலி ஆரம்பிக்கப்பட்ட சில ஆண்டுகளிலேயே இலங்கையில் ஒலிபரப்பைத் தொடங்கியது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஒரு பகுதியாக இது செயற்படுகிறது. நூற்றாண்டைத் தொட்டு நிற்கின்றது.)**

இலங்கை வானொலி நூற்றாண்டை எட்டும் நிலையில் இருப்பதைப் பற்றி சிந்திக்கும் போது, எனக்குள் ஒரு ஆழமான மரியாதை தோன்றுகிறது. ஏனெனில், இது வெறும் ஊடக வளர்ச்சியின் வரலாறு அல்ல. ஒரு தேசத்தின் நினைவுகளின் பயணம். ஒவ்வொரு ஒலியும், ஒவ்வொரு குரலும், ஒவ்வொரு பாடலும் மக்களின் வாழ்க்கையை எவ்வாறு தொட்டது என்பதை நாம் உணர்ந்தால், வானொலியின் ஆழமும் ஆன்மாவும் எவ்வளவு பெரியது என்பதை உணர முடியும்.

ஒரு நேயராக, முதலில் எனக்கு தோன்றுவது , வானொலி என்பது "ஒலி" மட்டுமல்ல, "உணர்ச்சி"யும் கூட. நம்முடைய தாத்தா, பாட்டிகள் தலைமுறையில் இருந்து குழந்தைகள் வரை, ஒவ்வொருவரும் ஒரு கட்டத்தில் வானொலியின் ஒலியுடன் இணைந்திருக்கிறார்கள். சிலருக்கு அது ஒரு காலை செய்தி சிலருக்கு அது ஒரு இரவு இசை மற்றவர்களுக்கு அது ஒரு கதை, ஒரு நாடகம், அல்லது ஒரு அறிவிப்பாக இருந்திருக்கலாம். அந்த ஒலிகள் வாழ்க்கையின் பின்னணிச் இசையாக மாறியிருக்கின்றன.

நான் நினைக்கும் போது, வானொலியின் சிறப்பான அம்சம் அது ஒருபோதும் மக்களின் மனதில் தொலைவாக வில்லை. தொலைக்காட்சி வந்தது, இணையம் வந்தது, சமூக ஊடகம் வந்தது . ஆனால் வானொலி இன்னும் உயிருடன் உள்ளது. காரணம் ஒன்றே. அது மனிதக் குரலை மையமாகக் கொண்ட ஊடகம். ஒரு குரல் உணர்வுடன் பேசும்போது அது இதயத்தை அடைக்கிறது. அதுதான் வானொலியின் சக்தி.

வானொலியின் குரல்கள் ஒரு தலைமுறையை வடிவமைத்தன. செய்தியாளர் குரல் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியது. நாடக கலைஞரின் குரல் ஒரு காட்சியை உருவாக்கியது.பாடகரின் குரல் ஒரு நினைவாக மாறியது. இவை அனைத்தும் சேர்ந்து, இலங்கையின் கலாச்சாரப் பிணைப்பை உருவாக்கின. அதனால் தான், இன்று கூட பலர் "அந்த காலத்து வானொலி நாடகங்கள்", "அந்த குரலின் இனிமை" என்று நெகிழ்ச்சியுடன் பேசுகின்றனர்.

எனது பார்வையில், வானொலியின் பெருமை அதன் அணுகல் மற்றும் அன்பு ஆகிய இரண்டிலும் உள்ளது. மிக எளிய கருவி மூலம், வானொலி தூர்ந்த கிராமங்களுக்கும், சிறிய தீவுகளுக்கும், பனித்தூவல் மலைச்சரிவுகளுக்கும் சென்றது. அங்கு மின்சாரம் இல்லாவிட்டாலும், பேட்டரி வானொலி இருந்தது. ஒரு சிறிய கருவி ஆனால் அதில் உலகம் முழுவதும் பேசிக் கொண்டிருந்தது. அது நாகரிகத்தை மக்களிடம் கொண்டு சென்றது என்பதை ஒரு நேயராக கூறிக்கொண்டு, ஒலி தொடரும் பயணத்தின் கதையை தொடங்குகின்றேன்.

1925 ஆம் ஆண்டு இலங்கையின் இதயத்தில் ஒலித்த அந்த முதல் சிக்னல், இன்று ஒரு நூற்றாண்டின் நிழலை நோக்கிச் செல்கிறது. "சிலோன் வானொலி" எனப் பெயரிடப்பட்ட அந்த நிலையம், ஒரு சாதாரண ஒலிபரப்பின் தொடக்கம் அல்ல. அது இலங்கையின் ஒலியையும் உணர்வையும் ஒன்றிணைத்த ஒரு வரலாற்றுப் பயணத்தின் தொடக்கம் ஆகும். அந்த ஒலி உலகின் முதல் வானொலி ஒலிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இன்று நூற்றாண்டை எட்டும் அந்தக் குரல், இன்னும் உயிரோடு மக்களின் இதயத்தில் ஒலிக்கிறது.

அந்த காலத்தில் வானொலி என்ற புதிய தொழில்நுட்பம் இன்னும் வளர்ந்து கொண்டிருந்தது. மின் அலைகள் வழியாக ஒலியைப் பரப்புவது அன்றைய மக்களுக்குப் புதுமையான அதிசயமாக இருந்தது. கொழும்பில் சிறிய பரிசோதனை நிலையமாக தொடங்கிய அந்த ஒலி, சில ஆண்டுகளுக்குள் "Colombo Radio" என அறியப்பட்டு, பின்னர் உலகமெங்கும் "Radio Ceylon" எனப் புகழ் பெற்றது. அதன் குரல் இலங்கையைக் கடந்து இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், மாலைதீவு, மியான்மர் போன்ற நாடுகளிலும் கேட்கப்பட்டது.

சிலோன் வானொலி, ஆரம்பத்திலிருந்தே தனது பண்பாட்டு நிலையை உறுதியாகப் பேணியது. அந்தக் காலத்தில் இலங்கைப் பொதுமக்கள் இசை, நாடகம், செய்தி, கல்வி போன்ற பல துறைகளிலும் வானொலியின் வழியே புதிய அனுபவங்களை அடைந்தனர். இதன் ஒலிகள் ஒரு குடும்பத்தின் நாளாந்த வாழ்வின் ஓர் அங்கமாக மாறின. காலை வானொலியிலிருந்து இரவின் இறுதி பாடல் வரை மக்களின் வாழ்வின் துடிப்போடு வானொலி பயணித்தது.

அந்த வகையில்,சிலோன் வானொலியின் சிறப்பு அதன் மொழிவளமும் குரல்வளமும் ஆகும். வானொலியின் குரல் என்பது ஒரு ஒலியல்ல. அது உணர்வுகளைத் தாங்கிய உயிரான சக்தி. அந்தக் காலத்தில் ஒலிபரப்பாளர்கள் தங்கள் குரல் வழியாகவே மக்களின் மனதைக் கவர்ந்தனர். குரல் பயிற்சி, உச்சரிப்பு, சொற்களின் இனிமை ஆகியவை வானொலியின் அடித்தளமாக இருந்தன. ஒலி தாளங்கள், இடைவெளி, மெல்லிசை இவை அனைத்தும் இணைந்து ஒரு முழுமையான

தொடர்ச்சி▼

# நேரத்தின் நெடுவழியில் ஒலிக்கும் இலங்கை வானொலி!

தொடர்ச்சி▲

ஒலி அனுபவத்தை உருவாக்கின.

இந்த வானொலி தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வானொலி நிகழ்ச்சிகள் தொடங்கியதில் அதன் பன்முக மொழி வளம் வெளிப்பட்டது. ஒவ்வொரு மொழியும் அதன் கலாச்சாரத்தை பிரதி பலித்தது. தமிழ் நிகழ்ச்சிகள் இனிமையுடனும் இலக்கிய நயத்துடனும் அமைந்தன. சிங்கள நிகழ்ச்சிகள் நாட்டுப்பற்றின் சுவையையும் ஆங்கில நிகழ்ச்சிகள் உலக பார்வையையும் தந்தன. இதனால் சிலோன் வானொலி ஒரு பன்மொழி கலாச்சாரத்தின் தளமாக விளங்கியது.

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றபின், வானொலி தேசிய குரலாக மாறியது. செய்தி, கல்வி, விவசாயம், கலாச்சாரம், அரசியல், இசை, நகைச்சுவை என பல துறைகளில் வானொலி தனது தாக்கத்தை விரிவுபடுத்தியது. மக்களுக்கு நம்பிக்கையூட்டும் செய்தி, சமூகத்தைச் சிந்திக்க வைக்கும் விவாதம், நாட்டின் முன்னேற்றத்தை வெளிப்படுத்தும் நிகழ்ச்சி இவை அனைத்தும் ஒலியின் வழியே மக்கள் மனதில் பதிந்தன.

1950களில் வணிக விளம்பரங்கள் வானொலியில் தோன்றியபோது, அதன் புதிய பரிமாணம் உருவானது. “Radio Ceylon Commercial Service” எனும் பிரிவு ஆசியா முழுவதும் பெரும் செல்வாக்கைப் பெற்றது. இந்திய நிறுவனங்கள் தங்களின் விளம்பரங்களைச் சிலோன் வானொலியின் வழியாகப் பரப்பி, இலங்கையின் பொருளாதாரத்திற்கும் வானொலிக்கும் புதிய உறவினை ஏற்படுத்தின. அக்காலத்தில் ஒலித்த “Binaca Geet Mala” போன்ற நிகழ்ச்சிகள் எல்லைகளைக் கடந்து மக்கள் மனதில் நிலைத்தன.

இவ்வாறாக, வானொலியின் ஒலி உலகம் எளிமையிலும் ஆழத்திலும் அமைந்தது. குரல் சாயல்கள், ஒலி இசை, மொழி தாளம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு ஒவ்வொரு நிகழ்ச்சியையும் உயிர்ப்புடன் மாற்றியது. ஒரு செய்தி வாசகரின் குரல் உறுதியைத் தந்தது. ஒரு பாடகரின் குரல் இனிமையைப் பரவச் செய்தது. ஒரு கதையாசிரியரின் குரல் கற்பனையை உயிர்ப்பித்தது. குரல் என்பது வானொலியின் உயிர், அந்த உயிர் நூற்றாண்டை நெருங்கியும் மங்கவில்லை.

சிலோன் வானொலியின் அடையாளம் அதன் சமூக உறவுகள் ஆகும். கிராமங்களில் விவசாயிகள் காலை வானொலி வழியே விவசாய அறிவுரைகளைப் பெற்றனர். பெண்கள் குடும்ப நிகழ்ச்சிகளின் வழியே சமூகவியல் விழிப்புணர்வை அடைந்தனர். குழந்தைகள் கதைகள், பாடல்கள் வழியே கற்பனை உலகத்தைக் கண்டனர். இளைஞர்கள் இசை நிகழ்ச்சிகளின் வழியே உலக கலாச்சாரத்துடன் இணைந்தனர். இவ்வாறு வானொலி ஒரு குடும்பத்தின் நெருங்கிய உறுப்பாக இருந்தது.

சிலோன் வானொலியின் மொழிப் பாவனை எப்போதும் எளிமையானதாய் இருந்தாலும், அதில் மறைந்திருந்தது கவிதைநயம். வானொலி நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் மக்களின் மனதுடன் உரையாடும் வகையில் இருந்தன. ஒரே வாக்கியத்திலேயே உணர்வு, தகவல், பண்பாடு ஆகிய மூன்றையும் இணைக்கும் திறன் வானொலி மொழிக்கு இருந்தது. இதனால் அது இலக்கியத்துக்கும் ஊடகத்துக்கும் இடையே ஒரு பாலமாக மாறியது.

சிலோன் வானொலியின் முக்கியமான பண்புகளில் ஒன்று கல்விச் சேவை. பள்ளிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கான கல்வி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன. இலக்கிய வாசிப்புகள், கல்வி போட்டிகள்,



சொற்பொழிவுகள் இவை கல்வி உலகத்தையும் வானொலியையும் இணைத்தன. இதன் வழியே பல தலைமுறைகள் வானொலியின் குரலில் கல்வியை கற்றன.

அதே நேரத்தில், சிலோன் வானொலி கலை மற்றும் கலாச்சாரத்தின் ஊடகமாகவும் இருந்தது. நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள், கவிதை வாசிப்புகள், கலைஞர் பேட்டிகள் ஆகியவை வானொலியின் மூலம் மக்கள் மத்தியில் பரவின. பல பிரபல கலைஞர்கள் தங்கள் பயணத்தை வானொலி நிலையத்தின் மைக்கிலிருந்து தொடங்கினர். அந்தக் குரல்கள் பின்னர் திரை உலகத்திலும் தொலைக்காட்சியிலும் நம்மைச் சந்தித்தன.

வானொலி ஒரு தொழில்நுட்ப முயற்சி மட்டுமல்ல. அது ஒரு மனித கலை. ஒலி பொறியாளர்கள், எழுத்தாளர்கள், குரல் கலைஞர்கள், தயாரிப்பாளர்கள், செய்தியாளர்கள் இவர்கள் அனைவரும் இணைந்து ஒலி உலகை உருவாக்கினர். ஒவ்வொரு நிகழ்ச்சியும் பலரின் உழைப்பின் ஒலியாக இருந்தது. இதனால் சிலோன் வானொலி ஒரு தொழில் நிலையமாக மட்டுமல்ல, ஒரு பண்பாட்டு பள்ளியாகவும் இருந்தது.

நூற்றாண்டை நெருங்கும் இந்நாளில், சிலோன் வானொலி தன்னை புதுப்பித்துக் கொண்டிருக்கிறது. இன்று அது இணையத்தின் வழியாக, மொபைல் பயன்பாடுகள் வழியாக, செயற்கைக்கோள் வழியாக உலகம் முழுவதும் ஒலிக்கிறது. ஆனால் அதன் குரல் மாறவில்லை. அதன் உணர்வு இன்னும் அதே. தொழில்நுட்பம் மாறியபோதும், வானொலியின் நோக்கம் மாறவில்லை. மக்களை இணைப்பதும், உண்மையைப் பரப்புவதும், பண்பாட்டை பாதுகாப்பதும் என்ற அடிப்படை நோக்கம் தொடர்கிறது.

எனக்கு சிறப்பாக நினைவாக நிற்கும் ஒன்று குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள். அந்த நிகழ்ச்சிகள் வெறும்

தொடர்ச்சி▼

# நேரத்தின் நெடுவழியில் ஒலிக்கும் இலங்கை வானொலி!

**தொடர்ச்சி▲**

பொழுதுபோக்காக அல்லாமல், அறிவு வளர்ச்சிக்கான கதவுகளாக இருந்தன. கதை, பாடல், புதிர், நகைச்சுவை இவை அனைத்தும் வானொலியின் வழியே குழந்தை மனதில் சிந்தனையை விதைத்தன. அது தான் உண்மையான கல்வி குரலால் கற்பிக்கும் கலை.

வானொலியின் மொழி பாவனையும் ஒரு அதிசயம். அதில் காணப்படும் இலக்கிய நயம், உச்சரிப்பு துல்லியம், சொற்களின் இசை. இவை அனைத்தும் வானொலியின் செல்வம். ஒரு செய்தியை எவ்வாறு சொல்ல வேண்டும் என்பதை வானொலி கற்றுத்தந்தது. இன்று டிஜிட்டல் ஊடகங்களிலும் "ஒலியின் ஒழுக்கம்" தேவைப்படுகின்றது என்றால், அதன் அடிப்படை வேர்கள் வானொலியில்தான் இருக்கின்றன.

ஒரு சிந்தனையாளராக, நான் சிலோன் வானொலியை ஒரு "மனிதத் தொடர்பு ஊடகம்" என்று பார்க்கிறேன். ஏனெனில் அது ஒருபோதும் பார்வையை அடிப்படையாகக் கொள்ளவில்லை. கேட்பதையே மையமாகக் கொண்டது. பார்வை எங்களைப் பிரிக்கலாம், ஆனால் ஒலி எங்களை இணைக்கிறது. அந்த இணைப்பு வானொலியின் மிகப் பெரிய வெற்றி.

இன்று வானொலி தன்னை மாற்றிக் கொண்டிருக்கிறது இணையம், பாட்காஸ்ட், மொபைல் செயலிகள் வழியே புதிய வடிவங்களை எடுத்துக்கொள்கிறது. ஆனால் அதன் உள்ளம் அதேதான் மக்களுடன் பேசுதல், மக்களைக் கேட்பது, மக்களின் கதைகளைப் பகிர்தல். இந்த மாற்றத்துக்கும் நிலைத்தன்மைக்கும் இடையே உள்ள சமநிலைதான் வானொலியை நூற்றாண்டு கடக்கச் செய்தது என்று நான் நம்புகிறேன்.

ஒரு நூற்றாண்டை எட்டுவது என்பது ஒரு ஊடகத்துக் கான வெற்றி அல்ல . அது ஒரு சமூகத்தின் உயிர்த்துடிப்பு. வானொலி, இலங்கையின் இதய துடிப்பைப் போல. அது ஒரு தேசத்தின் குரல், ஒரு மக்களின் நினைவு, ஒரு கலாச்சாரத்தின் பிரதிபலிப்பு.

எனது எண்ணத்தில், எதிர்காலத்திலும் வானொலி தனது ஒலியால் உயிருடன் இருக்கும். அது தொழில் நுட்பத்தால் மாற்றப்படாது, மாறாக தொழில்நுட்பத்தையே தன்னுள் இணைத்து புதுப்பிக்கும். அன்றைய ஒலி, இன்றைய குரலாகவும், நாளைய நம்பிக்கையாகவும் தொடரும்.

வானொலியின் ஒலி நம்முள் இன்னும் ஒலிக்கிறது. அது ஒரு நூற்றாண்டின் இசை மட்டுமல்ல, நம் வாழ்க்கையின் சுவாசம்கூட. நம் தலைமுறைகள் மாறி னாலும், அந்த குரலின் நெருக்கம் மாறாது. அதுவே வானொலியின் மந்திரம்.

இன்றைய குழந்தைகளுக்கும் வானொலி இன்னும் உயிரோடு உள்ளது. "சின்னஞ்சிறு வானொலி", "கதைகள் கேட்கலாம்", "பாடல் பூங்கா" போன்ற நிகழ்ச்சிகள் புதிய தலைமுறையையும் ஒலியின் உலகத்துடன் இணைக் கின்றன. ஒவ்வொரு தலைமுறையும் வானொலியின் வழியே தன் சொந்த நினைவுகளை உருவாக்குகிறது.

சிலோன் வானொலி இன்று நூற்றாண்டை எட்டும் புனிதப் பாதையில் நடந்து கொண்டிருக்கிறது. அதன் வரலாறு வெறும் ஒலிபரப்பின் வரலாறல்ல. அது இலங்கையின் சமூக மாற்றத்தின் ஒலி பதிவாகும். அரசியல், கல்வி, கலை, கலாச்சாரம், பெண்கள் முன் னேற்றம், விவசாயம் எதை எடுத்தாலும் அதன் ஒலி சுவடுகள் வானொலியில் பதிந்துள்ளன.

அந்த ஒலி, ஒரு நூற்றாண்டின் சாட்சி அது இலங்கை யின் இதயத் துடிப்பு. மின்சார அலைகளில் பிறந்த



அந்த குரல், இன்று இணையத்தின் வழியே உயிருடன் ஒலிக்கிறது. காலம் மாறினாலும், அந்த ஒலி இன்னும் நம் நினைவுகளை மின்னச் செய்கிறது.

சிலோன் வானொலி, அது ஒரு நிறுவனம் அல்ல, ஒரு உயிருடன் வாழும் நினைவு. ஒலியின் வடிவில் நம் சமூகத்தின் வரலாறை சுமந்த குரல். அந்த குரல் இன்னும் சொல்லாத கதைகளைக் கூறிக் கொண்டி ருக்கிறது. நூற்றாண்டு எட்டும் அந்த வானொலி, ஒலி மங்காது, உணர்வு குறையாது, காலத்தோடு புதுபட்டே போகிறது.

இலங்கை வானொலி நூற்றாண்டை எட்டும் இந்த அற்புதக் காலப் பயணம் வெறும் ஊடக வரலாறு அல்ல் அது ஒரு தேசத்தின் சுவாசம், ஒரு மக்களின் நினைவாகிய ஒலி. தொலைதூர கிராமங்களின் மழை ஒலியிலும், நகரங்களின் இரவின் அமைதியிலும், வானொலியின் குரல் இன்னும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. அது எங்களை மகிழ்விக்கும் குரல் மட்டுமல்ல, நம்மை ஒன்றிணைக்கும் இதயத் துடிப்பும் கூட. ஒரு நூற்றாண்டை எட்டுவது என்பது பெருமைமிக்க சாதனை ஆனால் அதைவிடப் பெரிதாக இருப்பது, நூற்றாண்டு முழுவதும் மக்களின் நம்பிக்கையையும் அன்பையும் தக்க வைத்திருப்பது. அந்த நம்பிக்கையை சுமந்த வானொ லியின் ஒவ்வொரு குரலுக்கும், ஒவ்வொரு பணியாள ருக்கும், ஒவ்வொரு கேட்பவருக்கும் இந்த வாழ்த்துரை சமர்ப்பிக்கப்படுகிறது.

இது ஒரு ஊடகத்தின் வெற்றிக் கதை மட்டுமல்ல, "குரலால் இணைந்த மனங்களின் வரலாறு". எதிர் காலத்திலும் இலங்கை வானொலி தன்னுடைய பண் பாட்டுச் செல்வத்தையும், குரல் வளத்தையும், மக்களோடு கொண்டிருக்கும் உறவையும் காக்கும் என்ற நம்பிக்கை நமக்குள் உறுதியாய் இருக்கிறது.

நூற்றாண்டை எட்டும் இவ்வேளையில், இலங்கை வானொலிக்கு என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள். அதன் ஒலி என்றும் உயிருடன் ஒலிக்கட்டும், அதன் குரல் என்றும் மக்களின் இதயத்தில் ஒளிக்கட்டும், அதன் சேவை என்றும் காலத்தைத் தாண்டி மக்களைத் தொடட்டும். "ஒலியின் ஒளியாகிய இலங்கை வானொ லிக்கு வாழ்த்துகள்"

**அப்துல் அஸீஸ் அஸ்மா,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ் . பல்கலைக்கழகம்.




# மன்னார் பூ பந்தாட்ட அணி தேசிய ரீதியில் சாதனை

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்ட பூ பந்தாட்ட அணி தேசிய ரீதியில் இரு இடங்களைத் தனதாக் கியுள்ளது.

கொழும்பில் கடந்த சனிக்கிழமை (04) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தேசிய பூப்பந்தாட்ட போட்டியில் ஆண்கள் அணியினர் மூன்றாம் இடத்தையும், பெண்கள் அணியினர் நான்காம் இடத்தையும் பெற்றுக் கொண்டார் கள்.

முதன் முறையாக குறித்த போட்டியில் கலந்து கொண்டு குறித்த இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

குறித்த வீரர்களின் பயிற்றுவிப்பாள ராக ஜெரமி செயற்பட்டமை குறிப்பிடத்தக் கது.









# சிறுவர் தினத்தை முன்னிட்டு ஏழாலையில் உதவி வழங்கல்

யாழ். ஏழாலை தெற்கு மயிலங்காடு கிராமத்தில் உள்ள ஸ்ரீ முருகன் முன் பள்ளியில் நேற்று திங்கட்கிழமை (06) தேசிய சிறுவர் மற்றும் ஆசிரியர் தினங்களை முன்னிட்டுக் கலை நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வு ஏழாலை தெற்கு மயிலங்காடு கிராமத்தில் உள்ள கலாச்சார அபிவிருத்தி ஒன்றிய மண்டபத்தில் நடைபெற்றது.

ஸ்ரீ முருகன் முன்பள்ளியின் வேண்டுகோளுக்கு இணங்க, ஜேர்மன் நாட்டின் லுவிக்ஸ்பர்க் பிரதேசத்தில் வசிக்கும் கந்தசாமி சந்திரன் வழங்கிய நிதியுதவியின் ஊடாக சமூக மேம்பாட்டு கழகத்தினர் தேவையான பொருள்களை வழங்கினர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தின் ஓய்வு நிலை அதிபர் சைவப்புலவர் செல்லையா பரமேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக சமூக மேம்பாட்டுக் கழகத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் இ.தயாபரன், சமூக செயற்பாட்டாளர் ப.சிறீதரன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வலி. தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் க.அபராசுதன், மயிலங்காடு கலாச்சார ஒன்றியச் செயலாளர் நா. ரமேஷ், ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் பொருளாளர் கி.இராஜசேகர், ஸ்ரீ முருகன் அறநெறிப் பள்ளி ஆசிரியர் கு.யாம்சனா ஆகியோருடனும் கலந்து கொண்டனர்.








# முள்ளிப் பொத்தானையில் நடந்த இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம்

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண ஆயுள்வேதத் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் இலவச வைத்திய முகாம் இன்று (07) முள்ளிப்பொத்தானை அக்ரபோதி விகாரையில் நடைபெற்றது.

இதில் சிரேஷ்ட ஆயுள்வேத வைத்திய நிபுணர், தேர்ச்சி பெற்ற ஆயுள்வேத வைத்தியர்களும் கலந்து கொண்டு சிகிச்சையளித்தனர்.

இவ்வைத்திய முகாமில் சீனி நோயிக்கான இரத்த பரிசோதனை , ஆலோசனை, சிறுநீரக வியாதிக்கான விஷேட வைத்திய சிகிச்சை முறைகள், ஆலோசனை, பக்க வாதம் , முழங்கால் வலி ,முதுகு வலி , இடுப்பு வலி , தசை பிடிப்பு போன்ற நோய்களுக்கான விஷேட வைத்திய சிகிச்சை, அக்குபஞ்சர், கப்பிங், பத்து கட்டுதல், சீனி வியாதிக்கான நாட்பட்ட காயங்களுக்கான மருந்து கட்டுதல் போன்றவற்றுக்கான சிகிச்சைகள் இடம்பெற்றன.





# “நிலவைத் தொலைத்த வானம்” நூல் வெளியீடு வவுனியாவில்






ஞானம் கலைக்கூடத்தின் ஏற்பாட்டில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில், வன்னியர் கலா எழுதிய “நிலவைத் தொலைத்த வானம்” நூல் வெளி யீட்டு விழா நடைபெற்றது.

விழாவில் கௌரவ விருந்தினராக கொழும்பு தேஜஸ்வராலயா கலைக்கூட இயக்குனர், கலைஞானச்சுடர் ஸ்ரீமதி சுபாஷினி கலந்து கொண்டு உரையாற்றினார். பல தமிழ்ப் புலமையாளர்கள் விழாவில் கலந்துகொண்டனர்.

# பா.ஜ.கவின் அரசியல் நோக்கத்துக்கு நடிகர் விஜய் பலியாகிவிடக்கூடாது

## திருமாவளவன் தெரிவிப்பு





பா.ஜ.கவின் அரசியல் உள்நோக்கத்துக்கு த.வெ.க. தலைவர் விஜய் பலியாகிவிடக் கூடாது என வி.சி.க. தலைவர் திருமாவளவன் எச்சரித்துள்ளார்.

திருச்சியில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 பேரின் குடும்பங்களுக்கு 11ஆம் திகதி தலா 50,000 ரூபா நிவாரணம் வழங்க உள்ளோம். கரூர் சம்பவத்தை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி, பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ். போன்றவை அரசியல் ஆதாயம் கருதி திசை திருப்ப முயற்சிக்கின்றன. தமிழக அரசியலுக்கு இது உகந்ததல்ல. ஆனால், இந்த விவகாரத்தில் தமிழக முதல்வர் பெருந்தன்மையோடு நடந்து கொண்டுள்ளார்.


தமிழக ஆளுநர் நீதிமன்றத்தால் கண்டிக்கப்பட்ட பிறகும் கூட மீண்டும் அரசியல்வாதி போல நடந்து கொள்கிறார். பா.ஜ.கவை சேர்ந்தவர் போல பேசியிருப்பது அவருடைய அதிகார வரம்புகளை மீறிய செயலாகும்.

விஜய் மீது எங்களுக்கு தனிப்பட்ட வன்மம், காழ்ப்புணர்ச்சி இல்லை. அவரை கைது செய்து சிறைப்படுத்த வேண்டும் என்பது எங்களது நோக்கம் அல்ல. ஆனால், அவர் நடந்த சம்பவத்துக்காக வருந்தி இருக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் சொல்லியிருக்க வேண்டும். அரசியல் ஆதாயம் கருதி ஏமாற்றி இருக்கிறார் என்பதைதான் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு வழங்கிய 10 லட்சம் ரூபா போதாது. கூடுதலாக நிதி வழங்க வேண்டும். வாய்ப்பு உள்ளவர்களுக்கு அரசு வேலை வழங்க முன்வர வேண்டும்.

விஜய் தி.மு.கவை பலவீனப்படுத்த பயன்படுவார் என்று பா.ஜ.கவினர் நம்புகிறார்கள். அந்த அடிப்படையில் தன்னுடைய கொள்கை எதிரி என்று விஜய் பா.ஜ.கவை விமர்சித்தாலும், அவருக்கு வலிந்து ஆதரவு தருகிறார்கள். அவர்களுடைய நடவடிக்கையில் அரசியல் உள்நோக்கம் இருக்கிறது. அதற்கு விஜய் பலியாகிவிடக்கூடாது. தேர்தலுக்கு முன்னதாக டாஸ்மாக் கடைகளை மூடுவது குறித்து முதல்வர் ஒரு முடிவு எடுக்க வேண்டும்.” என்று தெரிவித்துள்ளார்.

# பா.ம.க. நிறுவனர் ராமதாஸை சந்தித்து நலம் விசாரித்தார் முதல்வர் ஸ்டாலின்






பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் இதய பரிசோதனைக்காக சென்னை அப்போலோ மருத்துவமனையில் கடந்த 5 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார். இதுபற்றி தகவல் அறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று மருத்துவமனைக்குச் சென்று, அவரை சந்தித்து நலம் விசாரித்தார்.

இதேபோல் காய்ச்சல், சளி, இருமல் பிரச்சினைக்காக இதே மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவின் குடும்பத்தினரையும் சந்தித்து ஸ்டாலின் நலம் விசாரித்தார்.

முன்னதாக, காலையில் மருத்துவமனைக்கு வந்த ராமதாஸ் மகனும், பா.ம.க. தலைவருமான அன்புமணி, மருத்துவர்களை சந்தித்து உடல்நிலை குறித்தும், அளிக்கப்படும் சிகிச்சைகள் பற்றியும் கேட்டறிந்தார்.

இதேபோல், அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான பழனிசாமியும் ராமதாஸை சந்தித்து உடல் நலம் விசாரித்தார்.



# கடலோர பகுதிகளில் மீட்பு, மாசு தடுப்புப் பணியில் ட்ரோன் பயன்பாட்டை அதிகரிக்க நடவடிக்கை

தேசிய மாசு தடுப்பு தினத்தை முன்னிட்டு, கடலோர காவல்படை 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடுக்கடலில் ஒத்திகை பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. அதன்படி, மாசு தடுப்பு ஒத்திகை சென்னை அருகே சுமார் 20 கிலோமீற்றர் தொலைவில் கடல் பகுதியில் கடலோர காவல்படை வீரர்கள் நேற்று பயிற்சியில் ஈடுபட்டனர்.

இதில் கப்பலில் தீ விபத்து ஏற்பட்டால், கடலோர காவல் படை கப்பல்கள் விரைந்து சென்று தீயை அணைப்பது, அதிலுள்ள பணியாளர்களை ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்பது, கடலில் தத்தளிக்கும் பணியாளர்களுக்கு விமானம் மூலமாக மிதவை உபகரணங்களை போடுவது, இரவு நேரங்களில் பிரத்தியேக ஒளி விளக்கை வானில் ஏவி, பிறர் உதவியை கோருவது, கடலில் எண்ணெய் கசிவு ஏற்பட்டால், டார்னியர் விமானம் மூலமாக கண்டறிவது, சிறப்பு மாசு தடுப்பு கப்பல்கள் மூலம் மிதவைகள் மூலமாக கடலில் எண்ணெய் பரவாமல் தடுப்பது, அவற்றை ஸ்கிம்மர்கள் மூலமாக உறிஞ்சுவது, கடலில் தத்தளிப்பவரை, ரிமோட் கொண்ட்ரோல் மூலம் இயக்கப்படும் மிதவையை கொண்டு சென்று மீட்பது உள்ளிட்ட ஒத்திகை பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது இந்திய கடலோர காவல் படை தலைவர் பரமேஷ் சிவமணி செய்தியாளர்களிடம் கூறுகையில்,

“கடலோர காவல்படையில் தற்போது 154 கப்பல்கள், 78 விமானம் மற்றும் ஹெலிகொப்டர்கள் உள்ளன. இப்படை, எண்ணெய் கசிவை எதிர்கொள்வதில் சிறப்பாக பணியாற்றி வருகிறது. உலக அளவில் கடலோர மாசு தடுப்பு பணிகளில் பயன்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பங்கள், உத்திகள் இந்திய கடலோர காவல்படையில் செயல்படுத்தப்படுகிறது.

இந்த ஆண்டு ஒத்திகையில் முதன் முறையாக ட்ரோனை பயன்படுத்தி, கடலில் தத்தளிப்போருக்கு மிதவை உபகரணத்தை கொண்டுபோய் சேர்த்திருக்கிறோம். கடலோர பகுதிகளில் மீட்பு, மாசு தடுப்பு பணிகளில் ட்ரோன்கள் பயன்பாட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.” என்றார்.

அப்போது, கடலோர காவல்படை ஏ.டி.ஜி.பி. டோனி மைக்கேல், கிழக்கு பிராந்திய கடலோர காவல்படை தலைவர் டட்விந்தர் சிங் சைனி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



# இறக்குமதி செய்யப்படுகின்ற லொறிகளுக்கு 25 சதவீத வரி

## ட்ரம்பின் அறிவிப்பால் இரு நாடுகள் கடுமையாகப் பாதிப்பு





நவம்பர் 1 ஆம் திகதி முதல் லொறி இறக்குமதிக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

ட்ரம்ப், தொடர்ச்சியாகப் பல்வேறு நாடுகள் மீது கூடுதல் வரிகளை விதித்து வருகின்றார். பல பொருள்களின் இறக்குமதிக்கும் தொடர்ந்து வரிகளை விதித்து வருகின்றார்.

சமீபத்தில் சமையலறை மற்றும் கழிவறை உபகரணங்களுக்கு 50 சதவீத வரியும், தளபாடங்களுக்கு 30 சதவீத வரியும் விதித்தார்.

மேலும் காப்புரிமை பெற்ற மருந்துகளுக்கு 100 சதவீத வரி விதிப்பதாக அறிவித்தார்.

இந்த நிலையில், லொறிகள் இறக்குமதிக்கு 25 சதவீத வரி விதிக்கப்படுவதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

நவம்பர் 1 ஆம் திகதி முதல் பிற நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்குள் வரும், அனைத்து நடுத்தர மற்றும் கனரக லொறிகளுக்கும் 25 சதவீத வரி விதிக்கப்படும் என்று அவர் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

பொருள்களை விநியோகிக்கும் லொறிகள், குப்பை லொறிகள், பொதுப் பயன்பாட்டு லொறிகள், போக்குவரத்து மற்றும் பாடசாலை பஸ்கள், கனரக தொழில் வாகனங்கள் ஆகியவை இந்த வரி விதிப்புக்குள் அடங்கும் எனவும் அறிவித்துள்ளார்.

இந்நிலையில், அமெரிக்காவிற்கு நடுத்தர மற்றும் கனரக லொறிகளை ஏற்றுமதி செய்யும் மிகப்பெரிய நாடுகளாக மெக்சிகோ, கனடா உள்ளன.

இந்த இரு நாடுகளும் ட்ரம்பின் புதிய வரி விதிப்பால் கடுமையாகப் பாதிக்கப்படும் என வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

# டொனால்ட் ட்ரம்புக்கு நோபல் பரிசு இல்லை

## நிபுணர்கள் திட்டவட்டம்

உலகில் பல்வேறு துறைகளில் தலைசிறந்து விளங்கும் நபர்களைத் தேர்வுசெய்து அவர்களுக்கு நோபல் பரிசு அளிக்கப்பட்டு வருகிறது.

ஸ்வீடனைச் சேர்ந்த விஞ்ஞானி ஆல்பிரெட் நோபல் நினைவாக, ஆண்டுதோறும் மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் என 6 துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

அந்த வகையில், நோபல் பரிசுக்கான அறிவிப்புகள் இன்று தொடங்கி ஒக்டோபர் 13 ஆம் திகதி வரை அறிவிக்கப்பட இருக்கிறது.

இதில் அமைதிக்கான நோபல் பரிசு ஒக்டோபர் 10 ஆம் திகதி அறிவிக்கப்பட இருக்கிறது. இதற்கிடையே, அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது முறையாகப் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், அமைதிக்கான நோபல் தனக்கு வழங்கப்பட வேண்டுமென அறிவித்துள்ளார்.

அதற்காக, தனக்கு வழங்க பரிந்துரைக்கும்படி அவர் பல நாடுகளை மறைமுகமாக வலியுறுத்துவதாகவும் கூறப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது முறை பதவியேற்ற அவர், இந்தியா-பாகிஸ்தான், கம்போடியா-தாய்லாந்து, இஸ்ரேல்-ஈரான், கொசோவோ-செர்பியா, கொங்கோ-ருவாண்டா, எகிப்து-எத்தியோப்பியா, ஆர்மீனியா-அஜர்பைஜான் நாடுகளுக்கு இடையிலான போர்களை நிறுத்தியதாகத் தொடர்ந்து கூறிவருகிறார்.

அதிலும் இந்தியா - பாகிஸ்தான் போரை தாமே நிறுத்தியதாக, இதுவரை 30க்கும் மேற்பட்ட முறை கூறியுள்ளார்.

மேலும், உக்ரைன் - ரஷ்யா மற்றும் காசா - இஸ்ரேல் இடையே போரை நிறுத்துவதற்கு தாம் முயற்சிகள் மேற்கொண்டு வருவதன் காரணமாகவும் தனக்கு நோபல் பரிசு அளிக்கப்பட வேண்டும் என அவர் சமீபகாலமாகத் தெரிவித்து வருகிறார்.

இதையடுத்து, ட்ரம்புக்கு நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என பாகிஸ்தான், இஸ்ரேல், கம்போடியா, அர்மேனியா, அஜர்பைஜான் ஆகிய நாடுகள் வலியுறுத்தி வருவதுடன், அது தொடர்பாக நோபல் குழுவுக்கு பரிந்துரைக் கடிதங்களையும் அவர்கள் அனுப்பியுள்ளனர்.

இதையடுத்து, விரைவில் அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட இருக்கும் நிலையில், அது ட்ரம்ப்க்கு வழங்கப்படுமா என்கிற விவாதங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

ஆனால், அவருக்கு நோபல் பரிசு கிடைக்க வாய்ப்பில்லை என்ற தகவல்களும் வெளிவந்து கொண்டே இருக்கின்றன.

எனினும் ட்ரம்ப்புக்கு நோபல் பரிசு கிடைப்பதற்கான வாய்ப்புகள் குறைவே என இவ்விருதுகள் குறித்து கூர்ந்து கவனித்துவரும் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் உள்ள அமைதி ஆராய்ச்சி மையத்தின் பணிப்பாளர் நினா கிரேகர் தெரிவித்துள்ளார்.

அதே நேரம் அமெரிக்காவில் கல்வி நிறுவனங்களுக்கான சுதந்திரங்களை ட்ரம்ப் மறுப்பதாக அமைதிக்கான நோபல் பரிசு குழு உறுப்பினர் ஒருவரே கூறியுள்ளமை கவனம் பெறுகிறது. ஒவ்வோர் ஆண்டும் நோபல் பரிசுக்காக ஆயிரக்கணக்கான பெயர்கள் முன்மொழியப்படுகின்றன.

அந்த வகையில், இந்த ஆண்டுக்கான விருதுக்கான பட்டியலில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், நேட்டோ, ஹாங்காங் ஆர்வலர் சௌ ஹாங்-டங் மற்றும் கனேடிய மனித உரிமை சட்டத்தரணி இர்வின் கோட்லர் உட்பட 338 நபர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.



டொனால்ட் ட்ரம்ப் போன்ற சில தலைவர்களும் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் அவருடைய பெயர், ஜனவரி 31 இற்குப் பிறகு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே, நோபல் விதிகள்படி அவை செல்லாது எனக் கூறப்படுகிறது. அதாவது, 2025 பரிசுக்கான பரிந்துரை காலக்கெடு ஜனவரி 31 ஆகும்.

மேலும் அவை 2026ஆம் ஆண்டுக்கு மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

ஆகையால், ட்ரம்ப்க்கான நோபல் வாய்ப்பு என்பது மிகவும் குறைவாகவே இருப்பதாக நிபுணர்கள் கருதுகின்றனர்.

முன்னதாக, இறுதிப் பட்டியலில் அவரது பெயரைச் சேர்க்காததுடன், ஐந்து பேர் கொண்ட நோபல் குழுவின் பெரும்பாலான உறுப்பினர்கள் அவரது பரிந்துரைக்கும் எதிர்ப்பு தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒருவேளை, ட்ரம்ப்க்கு நோபல் பரிசு அறிவிக்கப்படாவிட்டால், அது நோர்வேவுக்கு சிக்கல்களை ஏற்படுத்தும் என்றும் கூறப்படுகிறது.

ஏற்கெனவே அமெரிக்காவின் 15 வீத வரியை அனுபவித்து வரும் நோர்வேக்கு இது மேலும் அதிகரிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது. உறவுகளிலும் பேச்சுவார்த்தைகளிலும் சிக்கலை உண்டாக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

# கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 07/10/2025

## கனடாவின் அல்பெர்டாவில் ஆசிரியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடத் தீர்மானம்




C2 ▶



# இரட்டைக் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் விமான நிலையத்தில் கைது

ஒன்டாரியோ மாகாணத்தின் கிரேட்டர் சட்பெரியில் நடந்த இரட்டை கொலை வழக்கில் தேடப்பட்டு வந்த ஒரு சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

26 வயதான ரொமைன் சாம் என்பவர் ஒக்டோபர் 4ஆம் திகதி டொரோண்டோவிலுள்ள பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் விமானத்தில் இருந்து இறங்கியவுடன் கனடா எல்லை சேவை முகமை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

மேற்படி நபர் மீது இரண்டாம் நிலை கொலைக்கான இரண்டு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

C2 ▶

# கடவுச்சீட்டு அலுவலகத்தில் ஆள்குறைப்பு நடவடிக்கை






கனடிய கடவுச்சீட்டு அலுவலகத்தில் ஆள்குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

கனடிய கடவுச்சீட்டு அலுவலகங்களில் மேலும் பணியாளர் குறைப்புகள் நடைபெற உள்ளதாக, கனடா வேலைவாய்ப்பு மற்றும் குடியேற்ற சங்கம் எச்சரித்துள்ளது.

வேலைவாய்ப்பு மற்றும் சமூக மேம்பாட்டு துறை கடவுச்சீட்டு அலுவலகத்திலிருந்து இருந்து மேலும் 250 பணியிடங்களை குறைக்க தீர்மானித்துள்ளது.

கடந்த வாரம் இறுதியில், சுமார் 250 சங்க உறுப்பினர்களுக்கு அவர்களின் பதவிகள் பாதிக்கப்பட்டுள்ளன என்ற அறிவிப்பு வழங்கப்பட்டது.

இதற்கு முன்னர், இந்த ஆண்டு மே மாதத்தில் 800 தற்காலிக பணியிடங்கள் நீக்கப்பட்டிருந்தன என கனடா வேலைவாய்ப்பு மற்றும் குடியேற்ற சங்கம் திங்கள் கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

C2 ▶

# ஹாலிபர்டன் கவுண்டியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இரு முதியவர்கள் பலி






கனடாவின் ஹாலிபர்டன் கவுண்டியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இரண்டு முதியவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆல்கோன்க்வின் ஹைலாண்ட்ஸ் பகுதியில் பீச் ஏரி தெற்கே உள்ள விஸ்கி ஜாக் லேன் அருகே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் டிராக்டர் டிரெய்லர் லொறி மோதியதாக கூறப்பட்டுள்ளது. இதன்போது லொறி தீப்பற்றி எரிந்துள்ளது. பின்னர் தீயணைப்பு வீரர்கள் அதை அணைத்தனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த 79 வயது ஆண் மற்றும் 64 வயது பெண் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து விசாரணை நடைபெற்று வருவதால், ஹைவே 118 சுமார் ஐந்து கிலோமீட்டர் தூரத்திற்கு பல மணி நேரங்கள் மூடப்பட்டிருக்கும் என அதிகாரிகள் அறிவித்திருந்தனர்.

இந்த சம்பவம் குறித்து சாட்சிகளும், சம்பந்தப்பட்ட காணொலி காட்சிகள் அல்லது தகவல்கள் உள்ளவர்களும் பொலிஸாரைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# கனடாவின் அல்பெர்டாவில் ஆசிரியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடத் தீர்மானம்

கனடாவின் அல்பெர்டா மாகாண ஆசிரியர் சங்கத்தின் சுமார் 51,000 உறுப்பினர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடத் தயாராக உள்ளனர்.

இந்த தொழிற்சங்க நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டால், மொத்தம் 2,500க்கும் மேற்பட்ட பொது, பிரிக்கப்பட்ட மற்றும் பிரஞ்சு மொழி பாடசாலைகளில் 7 லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் பாதிக்கப்படுவர்.

எட்மண்டன், கால்கரி, ஃபோர்ட் மெக்மரே மற்றும் லெத்பிரிட்ஜ் உள்ளிட்ட பல கல்விக் குழுக்கள், இறுதி நேர ஒப்பந்தம் எட்டப்படாவிட்டால், திங்கள்கிழமை முதல் வகுப்புகள் நிறுத்தப்படும் என பெற்றோருக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளன.

கடந்த வாரம் இரு தரப்பினரிடையேயான பேச்சுவார்த்தைகள் இணக்கப்பாடின்றி முடிவடைந்திருந்தன.




அரசாங்கம் கடந்த மாதம் முன்வைத்த நான்கு ஆண்டுகளில் 12 வீத சம்பள உயர்வு, வகுப்பறை அளவை சமன்படுத்த 3,000 புதிய ஆசிரியர்களை நியமிக்கும் வாக்குறுதி மற்றும் கொவிட்19 தடுப்பூசி செலவுக்கான நிதி உள்ளிட்ட அண்மைய சலுகையை ஆசிரியர்கள் நிராகரித்திருந்தனர்.

அரசாங்கம் முன்வைத்த 3,000 நியமனங்கள் போதுமானவை அல்ல. மாணவர் – ஆசிரியர் விகிதத்தை சமப்படுத்த மாகாணத்துக்கு குறைந்தது 5,000 புதிய ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

## இரட்டைக் கொலையுடன்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வழக்கு கடந்த ஓகஸ்ட் 29 ஆம் திகதி சட்பெரி நகரின் பாரிஸ் தெருவிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்துடன் தொடர்புடையது என்பது குறிப்பிடத்தக்கது.

இரட்டை கொலை சம்பவத்திற்குப் பிறகு ரொமைன் சாம் தெற்கு ஒன்டாரியோவுக்கு தப்பிச் சென்றது கண்டறியப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பின்னர் அவர் நாட்டை விட்டு வெளியேறியிருந்தார். தற்போது கனடாவுக்கு திரும்பியவுடன் பியர்சன் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நபர் நாடு கடத்தப்பட்டவர் அல்ல எனவும், அவர் எந்த நாட்டிலிருந்து வந்தார் என்பது விசாரணை நலனுக்காக வெளிப்படுத்தப்பட மாட்டாது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சட்பெரி பொலிஸார் சாமை பியர்சனில் காவலில் எடுத்துக்கொண்டு சட்பெரிக்கு திரும்பியுள்ளனர்.

இந்த இரட்டைக் கொலை தொடர்பில் ஏதேனும் தகவல்கள் இருந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## கடவுச் சீட்டு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"இந்த வேலைநீக்கங்கள் வெறும் எண்கள் அல்ல கனடியர்களுக்கு இடைவிடாமல் சேவை செய்து வந்த பணியாளர்களுக்கு எதிரான நேரடி தாக்குதலாகும்," என்று அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மே மாதத்தில் கனடா முழுவதும் சுமார் 800 பணியாளர்கள் கடவுச்சீட்டு அலுவலகங்களில் இருந்து நீக்கப்பட்டிருந்தனர்.